பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 06 சனிக்கிழமை 23.10.2021 கதிர் 215

## எலிக் காய்ச்சலால் இருவர் உயிரிழப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தணிந்துவரும் நிலையில் மறுபுறத்தில் டெங்கு நோயும், எலிக்காய்ச்சலும் அச்சறுத்தத் தொடங்கியுள்ளன.

கடந்த ஜூன் மாதம் முதல் இம்மாதம் (ஒக்ரோபர்) 20ஆம் திகதி வரையான நான்கு மாதங்களுக்குள் இலங்கையில் ☞2

# தமிழக மீனவரின் சடலம் இன்று ஒப்படைப்பு; கோட்டைப்பட்டினத்தில் உடனே நல்லடக்கம்!





(ந.லோகதயாளன்)

யாழ். காரைநகர் கடற்பரப்பில் கடந்த 18ஆம் திகதி உயிரிழந்த தமிழக மீனவர் ராஜ்கிரணின் சடலம் இன்று சர்வதேசக் கடலில் வைத்து இந்திய கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

காரைநகர் கோவளம் பகுதிக்குள் கடந்த 18 ஆம் திகதி ஊடுருவிய தமிழக மீனவரின் படகு ☞2

# வெலிக்கடைச் சிறையில் கைதிகள் பெரும் கலவரம்

### சொத்துக்களுக்குச் சேதம்; உயிராபத்து இல்லை

**கொழும்பு, வெலிக்கடைச் சிறைச்சாலையில் சுமார் 50 கைதிகள் இன்று பகல் கலவரத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது. எனினும், குறித்த கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் இன்று மாலை தெரிவித்துள்ளது.** ☞2




## சுவர் இடிந்து விழுந்ததில் சிறுவன் சாவு

வீடொன்றின் மதில் சுவர் இடிந்து விழுந்ததில் சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் புத்தளம், பள்ளம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுபொத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயது சிறுவனே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் ☞2

### வெள்ளைப்பூண்டு மோசடி;

## மேலும் ஒருவர் கைது

சதொச நிறுவனத்தில் இடம்பெற்றது எனக் கூறப்படும் வெள்ளைப் பூண்டு மோசடி தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த 56 வயதான வர்த்தகர் ஒருவரின் புதல்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சதொச நிறுவனத்துக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட சுமார் 150 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி ☞2

## 'டெல்டா' பிளஸ் திரிவு இங்கு பரவும் அபாயம்

### சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை



வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்கள் மூலம் இலங்கையில் டெல்டா பிளஸ் திரிவு பரவும் அபாயம் காணப்படுகின்றது எனச் சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பிரதி சுகாதார ☞2

## இளைஞர்களைத் தாக்கிய பொலிஸ் அதிகாரிக்கு ஆப்பு

### பணியில் இருந்து இடைநிறுத்தம்

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரில் இளைஞர்கள் இருவரைத் தாக்கிய பொலிஸ் அதிகாரி பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அறிவித்துள்ளார்.

வீதியில் பொலிஸ் அதிகாரி ஒருவர், இளைஞர்கள் இருவரைத் தாக்கும் வீடியோவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் டுவிட்டரில் பதிவிட்டு, பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, விடயத்தை ஆராய்ந்து அதிகாரியைப் பணியில் இருந்து இடைநிறுத்த ☞2

## தொற்று அதிகரித்தால் மீண்டும் பயணத்தடை!

### சுகாதாரப் பணிப்பாளர் அறிவிப்பு



நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்குமானால் மீண்டும் பயணத் தடைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார். ☞2

### சீரற்ற காலநிலையால்

## வவுனியாவில் வீடுகள் சேதம்

(வவுனியா நிருபர்)

வவுனியில் நேற்று பெய்த கடும் மழை மற்றும் காற்றால் 10 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளமையுடன், பயன் தரும் மரங்களும் அழிவடைந்துள்ளன.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்துவருகின்றது.

இந்நிலையில் நேற்று பெய்த கடும் மழை மற்றும் காற்று காரணமாக வவுனியா இராசேந்திரங்குளம், ☞2

## தீபாவளிப் பண்டிகையையொட்டி ஞாயிறு கடைகளைத் திறக்கவும்

### யாழ். வணிகர் கழகம் வேண்டுகோள்



(இ.கலையமுதன்)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் கடைகளை திறந்து வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு யாழ். வணிகர் சங்கத் தலைவர் ஆர். ஜெயசேகரன் வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொரோனா சூழ்நிலை ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இளைஞர்களைத் தாக்கிய ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸாரின் கொடுமைகள் தொடர்கின்றன என சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

சாணக்கியன் எம்.பிக்குப் பதிலளித்துள்ள அமைச்சர் சரத் வீரசேகர, இளைஞர்களைத் தாக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும்என்றுதெரிவித்துள்ளார்.

வீதி விபத்தொன்றின் விடயங்களை ஆராய்ந்துகொண்டிருந்த பொலிஸ் அதிகாரியின் பணிக்கு இடையூறு செய்த காரணத்தால் குறித்த இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(இன்னுமொரு செய்தி 6ஆம் பக்கத்தில்)

## 'டெல்டா' பிளஸ் திரிவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் டெல்டா பிளஸ் திரிவடையுமாயின் பொதுமக்களின் செயற்பாடு அதற்கு காரணியாக அமையும் எனவும் அவர் கூறினார்.

எனவே, பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளை கடுமையாக பின்பற்றுவது அவசியம் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் டெல்டா பிளஸ் திரிவு குறித்து நாட்டில் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிகள் ஊடாக பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் ஹேமந்த ஹேரத் மேலும் தெரிவித்தார்.

## தொற்று அதிகரித்தால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போது அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை, எதிர்வரும் 31ஆம் திகதி அதிகாலை தளர்த்தப்படவுள்ளது என அரசு நேற்று அறிவித்திருந்தது.

இந்நிலையில், பயணத்தடை தளர்த்தப்பட்டாலும் பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடித்து செயற்படுகிறார்களா என்பது கண்காணிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்குமானால் மீண்டும் பயணத்தடைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, மீண்டும் இவ்வாறானதொரு நிலைக்கு நாட்டை இழுத்துச் செல்ல வேண்டாம் என்றும், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாகச் செயற்பட வேண்டும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

## வவுனியாவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சூடுவெந்த புலவு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளமையுடன் சில வீடுகளின் கூரைத் தகடுகள் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, அரபாத் நகர் பகுதியில் வீசிய கடும் காற்றால் செய்கைபண்ணப்பட்டிருந்த வாழை மற்றும் பப்பாசி போன்ற பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தகவல்களைச் சேகரித்துள்ளனர்.

## தீபாவளிப் பண்டிகை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரணமாக நீண்ட காலமாக முடக்கப்பட்டிருந்த யாழ். நகரம் படிப்படியாக தற்போது வழமைக்குத் திரும்பி வருகின்றது.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகளைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வர்த்தகர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

இதன் மூலம் பொதுமக்களும் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கின்றோம். அத்தோடு குறித்த வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்காக ஏற்கனவே யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் ஏனைய துறை சார்ந்தவர்களோடு கலந்துரையாடப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தங்கள் கடைகளைத் திறந்து வழமைபோல் வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியும் - என்றார்.

## மேலும் ஒருவர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்ட சுமார் 56 ஆயிரம் கிலோகிராம் வரையிலான இரு வெள்ளைப்பூண்டு கொள்கலன்களை உயர் அதிகாரிகளின் எந்த அனுமதியும் இன்றி மூன்றாவது தரப்பொன்றுக்கு விற்பனை செய்த விவகாரத்தில் ஏற்கனவே ஐவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் ஆறாவது நபர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட ஐவரும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை, 50 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## சுவர் இடிந்து ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பள்ளம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெலிக்கடைச் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மரணதண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு கலவரத்தில் ஈடுபட்டனர் என்று சிறைச்சாலைத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார்.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்னதாக சிறைச்சாலையின் கூரை மீதேறி சில கைதிகள் போராட்டத்தை ஆரம்பித்திருந்த நிலையில் இன்று அது கலவரமாக மாறியது. நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மேலதிகமாகச் சிறைக்காவலர்கள் அழைக்கப்பட்டனர்.

கைதிகள் சிறைச்சாலைக்குள் உள்ள பொருள்களுக்குச் சேதங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில், சேதமடைந்த பொருள்களின் மதிப்பீடு இதுவரையில் கணக்கிடப்படவில்லை எனவும் சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## தமிழக மீனவரின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை கடற்படையினரின் படகுடன் மோதி கடலில் மூழ்கியது.

இதன்போது இரு இந்திய மீனவர்கள் மீட்கப்பட்டபோதும் ஒருவர் காணாமல் போயிருந்தார். இவ்வாறு காணாமல் போன இந்திய மீனவரான ராஜ்கீரன் கடந்த 20 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த மீனவரின் சடலம், இன்று அதிகாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் பொறுப்பெடுத்து கொண்டு செல்லப்பட்டது.

அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட சடலம் காலை 7 மணியளவில் இலங்கை கடற்படையினரின் கப்பலில் ஏற்றப்பட்டு 7.30 மணியளவில் இலங்கை கடற்படையின் கப்பல் சர்வதேச எல்லையை நோக்கிப் புறப்பட்டது.

ராஜ்கீரனின் சடலத்தை எடுத்துச் சென்ற கப்பல், 10 மணியளவில் சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடற்படையினரின் கப்பலில் சடலத்தைக் கையளித்தது.

சடலத்தைப் பொறுப்பேற்ற இந்திய அதிகாரிகளின் கப்பல் சர்வதேச எல்லையில் இருந்து முற்பகல் 10.30 மணியளவில் கோட்டைப்பட்டினம் நோக்கிப் பயணித்து பிற்பகல் 1.30 மணியளவில் கரையை அண்மித்தது. உள்ளூர் இழுவைப் படகுக்கு சடலம் மாற்றப்பட்டு கோட்டைப்பட்டினம் கிராமத்தைச் சென்றடைந்தது.

அங்கே உடலுக்கு அஞ்சலிகள் செலுத்தப்பட்டு நேரடியாக பிற்பகல் 2.30 மணியளவில் அடக்கம் செய்யப்பட்டது.

## எலிக் காய்ச்சலால் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எலிக்காய்ச்சல் காரணமாக 250 பேர் பாதிக்கப்பட்டுள்ளதனர். அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த 250 நோயாளர்களும் கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட மற்றும் மாவனெல்ல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அமெரிக்க லொத்தர் வீசா DV-2023

DEPARTMENT OF STATE · UNITED STATES OF AMERICA

- அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான வீசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
- 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம்.
- பிரதான விண்ணப்பதாரிக்கு கடவுச்சீட்டு அவசியம்.
- அமெரிக்க லொத்தர் வீசா சேவையில் கடந்த 22 வருடகாலத்தில் எம்மூடாக விண்ணப்பித்த 1000ற்கு மேற்பட்டவர்கள் தற்போது நிரந்தரமாக அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.
- தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் அனைத்தும் எம்மால் மேற்கொள்ளப்படும்.

முடிவுத்திகதி - 09.11.2021



குறிப்பு : இறுதிநேர நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு கடைசிவரை காத்திராது இன்றே விண்ணப்பியுங்கள்.

தொடர்புகளுக்கு
அருள் வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
076 4431 576
இல.10, இ.போ.ச பஸ் டிப்போ எதிரில் பிரதான வீதி, பருத்தித்துறை.
இல.09, அருள் ஜுவல்லறி புதிய மாநகர சபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# கடனில் காலம் தள்ளும் அரசு

பெற்றோல் மற்றும் எரிபொருள்களின் விலையை அதிகரிக்காமல் அதே விலையில் மக்களுக்கு வழங்குவதற்கு நாடும் அரசும் படும் துன்பமும், படும் கடன்கள் பற்றிய புள்ளிவிவரங்களும் மலைக்க வைக்கின்றன.

இப்போதைய நிலையில் அவற்றை வழங்குவதற்கு ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 22 ரூபாவும், டீசலுக்கு 30 ரூபாவும் இழப்பு ஏற்படுவதாக எரிபொருள் வலு அமைச்சர் உதய கம்மன்பில கூறுகின்றார்.

கடந்த ஒகஸ்ட் 31 இல் – இவ்வாண்டுக்கான பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இழப்பு 70 ஆயிரம் கோடி ரூபா என்றும், ஒகஸ்டில் ஏற்பட்ட நஷ்டம் மட்டும் பத்தாயிரம் கோடி ரூபாவுக்கு அதிகம் என்றும் கூறப்படுகின்றது.

பெற்றோல் உலக சந்தையில் 13 டொலர் உயர்ந்து 92 டொலரை எட்டிய போதும் டீசல் 16 டொலர் உயர்ந்து 92.67 டொலரை எட்டிய போதும் இலங்கையில் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படவில்லை என்று அரசு தரப்பு சுட்டிக்காட்டுகின்றது.

இந்த இழப்புகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து மானிய விலையில் எரிபொருளை மக்களுக்கு வழங்குவதற்காக அரசு ‘கடன் வாங்கி கல்யாணம் என்ற திருவிழாவை’ தொடர்வதாகக் கூறப்படுகிறது.

இந்த விதத்தில் எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்வதற்காக ஓமானிடமிருந்து 360 கோடி டொலரை (சுமார் 75 ஆயிரம் கோடி ரூபாவை) கடனாகப் பெறுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்து முடித்திருப்பதாகத் தெரிகின்றது.

இதைத் தொடர்ந்து இந்தியாவிடமிருந்து மேலும் 50 கோடி டொலரை (சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாவை) கடனாகப் பெறுவதற்கான பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு திறைசேரியிடமும் அமைச்சரவையிடமும் அங்கீகாரத்துக்காக ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிகின்றது.

நாடு பிணைமுறி மூலம் பெற்றுக் கொண்டுள்ள கடன் தொகையின்படி இப்போது முதல் 2026 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மட்டும் அது 5 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபா தொகையை செலுத்த வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

அந்தக் கடன் தொகையைத் தவிர இதைப் போல பல மடங்கு தொகையை முன்னைய படு கடன்களுக்கான தவணைக் கட்டணமாக வருடாந்தம் செலுத்த வேண்டிய நிலையில் நாடு உள்ளது.

இவற்றிற்கு மத்தியில்தான் எரிபொருள் விநியோகத்துக்காகப் பெருந்தொகை கடன் புதிது புதிதாக வாங்கிக் குவிக்கப்படுகின்றது.

எரிபொருள் இறக்குமதி செலவினம் கடந்த ஆண்டு ஒகஸ்டில் ஒரு பரலுக்கு (பீப்பாய்க்கு) 47.74 டொலராக இருந்தது. அதுவே இவ்வாண்டில் 74.88 டொலர் என்ற உச்சத்தைத் தொட்டுள்ளது. ஏற்கனவே பணவீக்கம், அந்நிய செலாவணி கையிருப்புப் பற்றாக்குறை, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, மோசமான பொருளாதார நிலைமை, விலைவாசி உயர்வு என இன்னோரன்ன பிரச்சினைகளால் தடுமாறும் இலங்கை அரசுக்கு எரிபொருள் தேவையை நிறைவு செய்வதற்கு எந்த மார்க்கமும் இல்லை. அதனால் அது தொடர்ந்து கடன் வாங்கித் தள்ளுகின்றது. சரியான மாற்றுப் பொருளாதார கொள்கையை வகுக்காமல் – காரிய சாத்தியமான திட்டங்களை முன்னெடுக்காமல் – தீர்க்கதரிசனம் மிக்க தந்திரோபாயங்களை மேற்கொள்ளாமல் – இத்தகைய பொருளாதார நெருக்குவாரங்களிலிருந்து நாடு மீளுவது சாத்தியமற்றது.

‘கடன் வாங்கிக் கல்யாணம்’ என்ற பாணியிலான திட்டங்கள், நடைமுறைகள், உடனடியாக மூச்சு விடுவதற்கான கால அவகாசத்தை – வாய்ப்பை – சந்தர்ப்பத்தை – தரக்கூடும்.

ஆனால் அது நெருக்கடியிலிருந்து மீளுவதற்கான உத்தியே அல்ல. மாறாக, மென்மேலும் நெருக்கடிக்குள் சிக்கவைக்கும் பொறியாகத்தான் அது மாறும். இதை அரசுத் தலைமை புரிந்து கொள்வது நல்லது.

# அறங்காவலர் மாப்பாணர் நினைவு நிகழ்வு நாளை

அண்மையில் குகபதம் அடைந்த யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவிலின் பத்தாவது அறங்காவலர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியாரை நினைவு கொள்ளும் நிகழ்ச்சிகள் நாளை 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளன. இந் நிகழ்ச்சிகளை நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலை கூடல் முன்னெடுக்கின்றது.

முதலியார் குகபதம் அடைந்து பதினாறாம் நாளாகிய அன்று காலை நல்லூரான் செம்மணி வளைவினை அண்மித்த பகுதியில் மேற்படி கூடல் மற்றும் குகனேயர் குழாம் அடியவர்களால் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் இப்பூவுலகில் வாழ்ந்த காலத்தினை அடையாளம் கொள்ளும் முகமாக 92 பனம் விதைகள் நாட்டி வைக்கப்படவுள்ளன இதற்கான ஏற்பாடுகளை கூடலின் இணை செயலர் சா.சுதர்சன் மேற்கொண்டு வருகின்றார்.

மாலை நாலு மணிக்கு கூடலின் இணை தலைவர் இ. இளங்கோவன் தலைமையில் மெய்நிகர் முறையில் பிரார்த்தனை வழிபாடும் உரைகளும் இடம்பெறவுள்ளன. தீப மேற்றல் பிரார்த்தனை ஆகியவற்றுடன் கலாநிதி, செ சொற்செல்வர் ஆறு.திருமுருகன், பேராசி யர்.என்.சண்முகலிங்கன் ஆகியோர்களது குகநேயர் குழாம் அடியவர் ஈ.கஜேந்திராவி தும் உரைகளும் கூடலின் இணைச் செயல கவிஞர் த.ஜெயசீலனின் கவிப்பாமாலையு சமர்ப்பிக்கப்படவுள்ளன.

# 135 ஏக்கர் காணிகளை வவுனியாவில் விடுவிக்குக!

## திலீபன் எம்.பி. கோரிக்கை



வவுனியா வடக்கு, முத்துமாரி நகரில் 135 ஏக்கர் வயல் காணியை விடுவிக்குமாறு வனவளத்துறை அமைச்சரிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வனவளத்துறை அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் வனவளத்துறை அதிகாரிகளுடன் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தச் சந்திப்பின் போது வன வள திணைக்களத்தினர் மக்கள் வாழும் பகுதிகளில் எல்லைக் கற்களைப் பதிப்பதற்கு முன்னர், பிரதேச செயலாளர்களுக்குத் தகவலை வழங்கி அவர்களது கருத்தைக் கேட்டறிந்து பிரதேச செயலக உத்தியோகத்தருடன் இணைந்தே எல்லைக் கற்களை பதிக்க வேண்டும் எனவும், இராணுவத்தினரோ அல்லது விசேட அதிரடிப்படையினரோ, காணிகள் அல்லது பற்றைகளைத் துப்புரவு செய்யும் பொது மக்களைக் கைது செய்தால், வன வளத் திணைக்களத்தினர் பிரதேச செயலாளர்களிடம் குறித்த இடம் தொடர்பாக கேட்டறிந்த பின்னரே நீதிமன்றத்துக்கு ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தேன்.

அத்துடன், வவுனியா வடக்கு முத்துமாரி நகர் மக்களின் வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்காக 135 ஏக்கர் வயல்காணிகளை விடுவித்து தருமாறும், மீள்குடியேற்ற செய்யப்பட்ட காஞ்சூரமோட்டை மக்களுக் காணி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் கோரியிருந்தேன்.

இதன்போது, வனவளத்துறை அமைச்ச எதிர்வரும் கிழமை குறித்த இடங்களை நேரி சென்று பார்வையிட்டு அதற்கான தீர்வுகளை உடனடியாக வழங்குமாறு அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்தார். இதன் மூலம் அம்ம களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கு எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜும் ஆத் தொழுகைக்கு நிபந்தனைகளுடன் அனுமதி

ஜும்ஆத் தொழுகைக்காக மாத்திரம் வரையறுக்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்று நிருபம் இலங்கை வக்பு சபையின் பணிப்புரைக்கமைய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ஐ.அன்ஸாரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.


அதற்கமைவாக நிபந்தனைகள் குறித்த விவரம் – எந்தவொரு பள்ளிவாசலிலும் இதற்காக எல்லா நேரத்திலும் கலந்துகொள்ளக் கூடிய அதிகபட்ச நபர்களின் எண்ணிக்கை 50 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

தொழுகையின் ஒரே ஓர் அமர்வு மாத்திரமே அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒரு வரிசை இடைவெளிவிட்டு தொழு கைகள் நடத்தப்பட வேண்டும். முகக்கவச அணிதல், ஒரு மீற்றர் இடைவெளி பேணல் சொந்தமான தொழுகை விரிப்பை எடுத்து வருதல் என்பன கட்டாயமானவையாகும்.

சுகாதார அல்லது பாதுகாப்புத் தரப்பினரி ஏனைய அனைத்து விதிமுறைகள் வழிகாட்டல்கள் மற்றும் வக்பு சபையி முன்னைய வழிகாட்டுதல்கள் மிகவு கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படல் வேண் டும். அதேவேளை வேறு எந்த கூட்டு வணக் வழிபாடுகள் அல்லது செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

# தாய்வானை அமெரிக்கா பாதுகாக்கும் ஜோ பைடன் சீனாவுக்கு எச்சரிக்கை!



சீனாவில் இருந்து தாய்வான் வளர்ந்து வரும் இராணுவ மற்றும் அரசியல் அழுத்தத்தை எதிர்கொள்ளும் நிலையில், தாய்வானை பாதுகாக்க அமெரிக்கா உறுதி கொண்டுள்ளது என ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

சி.என்.என். நடத்திய டவுன் ஹால் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஜனாதிபதி பைடனிடம், சீனா தனது சொந்தம் என்று கூறிக்கொள்ளும் தாய்வானை பாதுகாக்க அமெரிக்கா முன்வருமா என கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஜோ பைடன், 'ஆமாம், அதைச் செய்ய எங்களுக்கு ஒரு கட்டாயம் உள்ளது' என பதிலளித்தார்.

மேலும், அவர் கூறுகையில், சீனா மிகவும் சக்திவாய்ந்தவர்களாக இருக்கப் போகிறார்களா என்று கவலைப்பட வேண்டிய அவசியமில்லை

ஏனென்றால், சீனா, ரஷ்யா மற்றும் உலகின் மற்ற பகுதிகளுக்கு நாங்கள் உலக வரலாற்றில் மிக சக்திவாய்ந்த இராணுவம் என்று தெரியும்.

சீனாவுடனான பனிப்போர் எனக்கு வேண்டாம். நாங்கள் பின்வாங்கப் போவதில்லை, எங்களது எந்தக் கருத்தையும் மாற்றப் போவதில்லை என்பதை சீனா புரிந்து கொள்ள வேண்டும்' என கூறினார்.

எனினும், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின், கருத்துகளுக்கு சீனா இன்னும் பதிலளிக்கவில்லை.

தாய்வானுடன் அமெரிக்காவிற்கு அதிகாரப்பூர்வ இராஜதந்திர உறவுகள் இல்லை. ஆனால், உறவுகள் சட்டத்தின் ஒரு பகுதியாக அமெரிக்கா ஆயுதங்களை விற்கிறது. இதனால், தாய்வானை பாதுகாப்பதற்கான வழிமுறைகளை வழங்க வேண்டும் என அமெரிக்கா கூறுகிறது.

தாய்வான் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், அமெரிக்கா தாய்வானைப் பாதுகாக்கும் என்று ஓகஸ்ட் மாதத்தில் ஜனாதிபதி கூறிய பிறகு, தாய்வான் மீதான அமெரிக்க கொள்கை மாறவில்லை என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'தாய்வானுடனான அமெரிக்க பாதுகாப்பு உறவு, தாய்வான் உறவுகள் சட்டத்தால் வழிநடத்தப்படுகிறது. சட்டத்தின் கீழ் எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் நிலைநிறுத்துவோம். தாய்வானின் தற்காப்புக்காக நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம், மேலும் தற்போதைய நிலையில் ஒருதலைப்பட்சமாக மாற்றங்களை நாங்கள் தொடர்ந்து எதிர்ப்போம்' என கூறினார். சீனா, ஜனநாயக தாய்வானை பிரிந்த மாகாணமாக பார்க்கிறது. ஆனால் தாய்வான் தன்னை ஒரு இறையாண்மை கொண்ட நாடாக பார்க்கிறது. தீவு அருகே சீனாவின் விமானப்படையின் தொடர்ச்சியான அத்துமீறல்கள் குறித்து ஒரு வருடத்திற்கும் மேலாக தாய்வான் புகார் அளித்து வருகிறது.

சமீபத்தில் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங், தாய்வான், அமைதியான முறையில் சீனாவுடன் இணைக்கப்படுமென கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நேபாளத்தில் வெள்ளம் 88 பேர் பரிதாபச் சாவு



நேபாளத்தில் தொடர் மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 88 ஆக அதிகரித்துள்ளது.

நேபாளத்தில் மூன்று நாள்களாக கன மழை பெய்து வருகிறது. பல இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. மலைப் பாங்கான பகுதிகள் பலவற்றில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டு உள்ளது.

நேபாளத்தின் கிழக்கில் பஞ்சத்தார் மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 27 பேர் உயிரிழந்தனர். லாம், தோதி மாவட்டங்களில் 13 பேரும், கலிகோட், பைதாடி உள்ளிட்ட மாவட்டங்களில் 15 பேரும், மழை, வெள்ளத்திற்கு பலியாகியுள்ளனர். இது தவிர நேற்று முன்தினம் மழைக்கு பலியான எட்டு பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இந்நிலையில் நேற்று மேலும் 25 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இதையடுத்து மழை, வெள்ளத்திற்கு பலியானோர் எண்ணிக்கை 88 ஆக அதிகரித்துள்ளது. இதற்கிடையே பஜ்ஹங் மாவட்டத்தில் காணாமல் போன 21 பேரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மழை, பனிப்பொழிவு போன்ற காரணங்களால் மீட்பு நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

# சிறந்த முதியவருக்கான விருதை பெற மறுத்த பிரித்தானிய ராணி



பிரித்தானியாவைச் சேர்ந்த பிரபல பத்திரிகை ஒன்று பொது வாழ்க்கையில் சிறப்பான பங்களிப்பை வழங்கும் முதியவர்களை கௌரவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கும் ஆண்டின் சிறந்த முதியவர் என்னும் விருதை 95 வயதான ராணி 2-ம் எலிசபெத் வாங்க மறுத்துள்ளார்.

இந்த ஆண்டின் சிறந்த முதியவர் விருதை ராணி 2-ம் எலிசபெத்துக்கு வழங்க அந்தப் பத்திரிகை நிறுவனம் முடிவு செய்த நிலையில் அதனை பெற மறுத்துள்ள ராணி இது தொடர்பாக அந்தப் பத்திரிகைக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில் முதுமை என்பது நீங்கள் உணர்வதில்தான் உள்ளது. அதாவது முதுமை என்பது மனதில்தான் உடலில் அல்ல. நான் என்னை முதுமையாக உணரவில்லை. எனவே நான் இந்த விருதுக்கு தகுதியானவர் அல்ல. தகுதியான நபரை கண்டுபிடித்து அந்த விருதை வழங்குவீர்கள் என நம்புகிறேன் என தெரிவித்துள்ளார்.

மறைந்த இங்கிலாந்து இளவரசரும் ராணி 2-ம் எலிசபெத்தின் கணவருமான பிலிப் கடந்த 2011-ம் ஆண்டு தனது 90 வயதில் ஆண்டின் சிறந்த முதியவர் விருதை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

# தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள் என்று முன்பே பிரிட்டன் அறிந்திருந்ததாம்

## பிரிட்டன் அதிகாரிகள் தெரிவிப்பு



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள் என்று தாங்கள் முன்னரே அறிந்திருந்தோம் என பிரிட்டன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பிரிட்டனின் பாதுகாப்பு ஆலோசகர் ஸ்டீபன் கூறும்போது, அமெரிக்கா தனது படைகளை திரும்பப் பெற்றபோதே தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள் என்று அறிந்திருந்தோம். தலிபான்கள் ஆதிக்கம் செலுத்தும் ஓர் அரசாங்கம் இருக்கும் இறுதியில் அமையும் என்று நாங்கள் மதிப்பீடு செய்திருந்தோம். தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றினாலும் பல உலக நாடுகள் தலிபான்கள் அரசை அங்கீகரிக்கவில்லை. முன்னதாக, ரஷ்யா தலைமையில் இந்தியா உள்ளிட்ட பத்து நாடுகள் பங்கேற்ற ஆப்கானிஸ்தான் தொடர்பான பேச்சு மாஸ்கோவில் கடந்த சில நாள்களாக நடந்து வருகின்றது.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement In November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழகத் தொழில் வாய்ப்பை தமிழருக்கே வழங்க சட்டம் கோரி தமிழ்த் தேசியப் பேரியக்கம் போராட்டம்



தமிழ்நாட்டு வேலைகள், தொழில், வணிகம் ஆகியவற்றை தமிழருக்கே வழங்குவதை உறுதிசெய்து, தமிழ்நாட்டு அரசு தனிச்சட்டம் இயற்றவேண்டும் எனக்கோரி சென்னையில் தமிழ்த் தேசியப் பேரியக்கம் போராட்டம் நடத்தியுள்ளது.

இந்தப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். போராட்டத்திற்கு, தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.அருணபாரதி தலைமை தாங்கினார். நாம் தமிழர் கட்சியினர், காவிரி உரிமைமீட்புக்குழுவினர், தமிழ்த்தேசிய அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றனர். போராட்டம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியப் பேரியக்கம், தமிழ்நாடு மிக வேகமாக அயலார் மயமாகிவரும் நிலையில், தமிழ்த்தேசியப் பேரியக்கம் இதனை எதிர்த்து தொடர்ந்து போராடி வருகின்றது. தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்துள்ள தி.மு.க. தனது தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தவாறு தமிழ் நாட்டின் தனியார் துறைகளில் 75 வீதம் தமிழருக்கே என்ற கோரிக்கையை இன்னும் ஏன் செயல்படுத்தவில்லை என்ற அறச்சீற்றத்தோடு இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். தமிழ்நாட்டு அரசுத்துறை, தமிழ்நாடு அரசின் தொழில், வணிகத்துறை அனைத்திலும் நூறு வீதமானவேலைவாய்ப்புகள்மண்ணின் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள இந்திய அரசு அலுவலகங்கள், அதன் தொழில் – வணிக நிறுவனங்கள் அனைத்திலும் 90 வீதமான வேலை தமிழர்களுக்கே வழங்கப்பட வேண்டும். அவற்றில் பத்து வீதத்திற்கு மேலதிகமாக பணியில் உள்ள வெளி மாநிலத்தவர் அனைவரையும் வெளியேற்ற வேண்டும். தனியார் துறையிலும் 90 வீதமான வேலைகள் தமிழர்களுக்கே வழங்கப்பட வேண்டும், தமிழ்நாட்டில் மண்ணின் மக்களுக்கு வேலை பெற்றுத் தரவும் – தமிழ்நாட்டுத் தொழில் முனைவோர்க்குத் தொழிலாளிகளைத் தரவும் தமிழர் வேலை வழங்கு வாரியம் அமைக்கவேண்டும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கும், தொழில் – வணிக நிறுவனங்களுக்கும் மானியங்கள் உட்பட ஊக்குவிப்புத் திட்டங்களையும் பல சலுகைகளையும் அரசு செயல்படுத்த வேண்டும். வெளி மாநில – வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மின்சாரம், நிலம், வரி போன்றவற்றில் அளிக்கும் சலுகைகளை நீக்கவேண்டும். வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் தொழில் – வணிக நிறுவனங்களைத் தொடங்கிட தமிழ்நாட்டு அரசு உரிமம் வழங்கக் கூடாது. அவர்கள் சொத்துகள் வாங்கத் தமிழ்நாட்டு அரசு தடை விதிக்க வேண்டும்.


மிசோரம் – நாகாலாந்து போன்ற வடகிழக்கு மாநிலங்களில் வெளி மாநிலத்தவருக்கு வரம்புகட்ட நடைமுறையில் உள்ள உள் அனுமதி அதிகாரம் (Inner Line Permit) தமிழ்நாட்டு அரசுக்கும் வேண்டும், ஆகிய கோரிக்கைகள் இப்போராட்டத்தில் முன்வைக்கப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்திற்குப் பிறகு, தமிழ்நாட்டு அரசின் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவு தனி அலுவலர் இரா. இராம்பிரதீபனை நேரில் சந்தித்து, தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில் தமிழ்நாட்டு அரசுக்குக் கோரிக்கை மனு வழங்கப்பட்டது. போராட்டத்தையொட்டி சமூக வலைத் தளங்களில் தமிழ்நாடு வேலை தமிழருக்கே மற்றும் TamilnaduJobsForTamils ஆகிய ஹாஷ்டக்குகளை வெளியிட்டு டுவிட்டரில் பகிர்ந்து ஆதரவு திரட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

விளக்கு ஏற்றுவது, கைதட்டி ஒலி எழுப்புவது பயனளித்துள்ளது

# 100 கோடி டோஸ் தடுப்பூசி சாதனை குறித்து மோடி உரை

இந்தியாவில் 100 கோடி கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு அதுபற்றிய எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.



257 நாள்களில் 100 கோடி தடுப்பூசிகளை செலுத்தி இந்தியா கடினமான இலக்கை எட்டியுள்ளது. நாட்டு மக்கள் அனைவரின் கூட்டு முயற்சியால்தான் இது சாத்தியமானது. 100 கோடி டோஸ் தடுப்பூசி என்பது ஒரு புதிய சாதனையின் தொடக்கம். மிகப்பெரிய சாதனை படைத்து நாம் புதிய சரித்திரம் படைத்துள்ளோம். உலக அளவில் தடுப்பூசிகள் செலுத்தத் தொடங்கியபோது பெரும் மக்கள் தொகையைக் கொண்ட இந்தியா எப்படி தடுப்பூசிகளை பெறும்? எப்படி செலுத்தும்? என இந்தியா குறித்து பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன. எழுப்பப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் 100 கோடி டோஸ் தடுப்பூசிச் சாதனை பதிலளித்துள்ளது.

தடுப்பூசிகள் செலுத்தத்தொடங்கியபோது முக்கியஸ்தர்களுக்கு முன்னுரிமை என்பதைத் தவிர்த்தோம். கடைக்கோடி மக்களுக்கும் தடுப்பூசி செல்வதை அரசு உறுதி செய்தது. அனைவருக்கும் இலவச தடுப்பூசி என்ற திட்டத்தை கொண்டுவந்து இந்தச் சாதனையை எட்டியுள்ளோம். தற்போது இந்தியாவின் தடுப்பூசித் திட்டம் உலக அளவில் ஒப்பிட்டு பார்க்கப்படுகிறது. புதிய இந்தியாவின் விடா முயற்சி, நம்பிக்கைக்கு கிடைத்த வெற்றிதான் இந்த பரிசு. கடுமையான சோதனைக்கிடையே இது இந்தியாவுக்கு கிடைத்த வாய்ப்பாக மாற்றப்பட்டது.

உலக அளவில் மருந்துத் தயாரிப்பில் இந்தியாவுக்கு சிறப்பு இடம் கிடைத்துள்ளது. இந்தியாவின் தடுப்பூசித்திட்டம் முற்றிலும் அறிவியல் அடிப்படையில் வகுக்கப்பட்டது. கொரோனா காலகட்டத்தில் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டோம். கோவின் இணையத்தளம் தடுப்பூசித் திட்டத்தை மக்களிடம் மிக எளிதாக கொண்டுசேர்த்தது. கொரோனாத் தாக்கத்தால் துவண்டுவிடாமல் நாட்டின் வளர்ச்சிகான திட்டங்களையும் செயல்படுத்தினோம். விவசாயம், சுற்றுலா, தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தினோம்.

'இந்தியாவில் தயாரிப்போம்!' திட்டத்தின்கீழ் எளியமனிதர்களின்தயாரிப்புகளைவாங்குவதிலும் ஆர்வத்தை வளர்த்துள்ளோம். நமது நாட்டில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசி நம் மக்களை பாதுகாத்துள்ளது.

இனிவரும் காலங்களிலும் பாதுகாப்பை உறுதிசெய்யும். கொரோனா எனும் பெரும் துயரத்தை சந்தித்த நாம் எந்தத் துயரையும் சந்திக்கும் வலிமையைப் பெற்றுள்ளோம். இனிமேல் வீட்டிலிருந்து வெளியேறும்போது காலணி அணிவதுபோல், முகக்கவசம் அணிவதையும் பழக்கமாக்கிக்கொள்ள வேண்டும்.

விளக்கு ஏற்றுவது, கைதட்டி ஒலி எழுப்புவது எப்படி பயனளிக்கும் என்ற கேள்வி எழுப்பப்பட்டது. அந்த முயற்சிகள் எல்லாம் மருத்துவத்துறைக்கு உற்சாகத்தை அளித்தது'' என்று தனது உரையில் தெரிவித்திருக்கிறார் மோடி.

# காவிரி மாசு தொடர்பான அறிக்கை முதல்வருக்கு விரைவில் வழங்கப்படும்

## தமிழக சுற்றுச்சூழல் அமைச்சர் தகவல்



காவிரி ஆறு மாசுபடுவதைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை பெறப்பட்டுள்ளதாகவும் அது, முதலமைச்சரிடம் விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், அன்றாடத் தேவைகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தை சேமித்தால் சுமார் 1,000 மெகா வாட் மின்சாரம் சேமிக்கப்படலாம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. காவிரி ஆற்றில் கழிவுகள் கலந்து ஆற்று நீர் மாசடைவதாக சென்னை ஐ.ஐ.டி. குழு நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டது. இந்த நிலையில், ஈரோடு, குமாரபாளையம், பள்ளிப்பாளையம், கரூர் மற்றும் திருப்பூர் பகுதிகளில் இயங்கிவரும் சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகளிலிருந்து கழிவு நீர் ஏதும் காவிரி மற்றும் அதன் உபநதிகளில் வெளியேற்றப்படுகிறதா, என்பதைக் கண்காணிக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய பொறியியலாளர்கள் பத்துப்பேர் அடங்கிய குழுவை அமைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அந்தக் குழு, நீர் நிலைகளில் சோதனை மேற்கொண்டு நீர் மாதிரிகளைச் சேமித்து அறிக்கை அளித்திருக்கிறது. விரைவில் அந்த அறிக்கையை முதலமைச்சரிடம் சமர்ப்பித்து அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தீபாவளிப் பண்டிகை நெருங்கும் நிலையில் பட்டாசுத் தயாரிப்புக் குறித்து தொடர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உச்சநீதிமன்றத்தின் வழிமுறைகளைப் பின்பற்றி பட்டாசு வெடிப்பதற்கான நேரத்தை நிர்ணயம் செய்வது குறித்தும் குறும்படம் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாகவும் முதலமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு முடிவெடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்.

# கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு கிழக்கு மாகாண ஆளுநர் விஜயம்



கிழக்கு மாகாண ஆளுநர் மட்டு மாவட்டத்தில் சேதனப்பசளை உற்பத்தி சம்பந்தமான முன்னேற்ற மீளாய்வு களவிஜயத்தினை மேற்கொண்டுள்ளார். இதனொரு கட்டமாக நேற்று முன்தினம் மாலை கொக்கட்டிச்சோலை கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு முதல் தடவையாக விஜயம் மேற்கொண்டு இப்பகுதி விவசாய அமைப்பு பிரதிநிதிகள் விவசாயிகள் சேதனப்பசளை உற்பத்தியில் களபணியாற்றும் விவசாய திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களை சந்தித்து கலந்துரையாடி சேதனப்பசளை உற்பத்தியில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடியதுடன் சேதனப்பசளை உற்பத்தி சம்பந்தமான கையேட்டு நூலையும் விவசாயிகளுக்கு வழங்கி வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர். எஸ். பேரின்பராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சினால் 6 லட்சம் பெறுமதியான கொக்கட்டிச்சோலை கமநலஅபிவிருத்தி நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள சேதனப்பசளை மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் இயந்திரத்தை செயற்படுத்தும் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

# இளைஞனை தாக்கிய பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் சரத்

மட்டக்களப்பு – ஏறாவூர் பகுதியில் இளைஞன் ஒருவர் மீது தாக்குதலை நடத்திய பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மோட்டார் வண்டியில் பயணித்தவரை பொலிஸார் நிறுத்தியபோதும் அதனை பொருட்படுத்தாமல் குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் சென்றார் எனக் கூறப்படுகின்றது.

இதன் பின்னர் குறித்த நபரை பின்தொடர்ந்துவந்த பொலிஸ் அதிகாரி இடையில் மறித்து அந்த நபர் மீது தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் அதிகாரி தாக்கும் வகையிலான காணொலி வெளியாகி நேற்று பெரும்பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் அமைச்சர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸ் அதிகாரிக்கு தாக்குதலை நடத்த எந்த உரிமையும் இல்லை என தெரிவித்துள்ள சரத் வீரசேகர, சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார்.

# பொலிஸ்கான்ஸ்டபிள் கொரோனாவால் சாவு

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொரோனாத் தொற்றினால் சிகிச்சை பலனின்றி இன்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்புவன்னியார்வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய மரியநேசன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் நேற்றைய தினம் கொரோனாத் தொற்று காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இன்று காலை 7 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டு



மட்டக்களப்பு ஊறணிப் பகுதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றைத் திருடிச் சென்ற மூவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளைக் கைப்பற்றியுள்ள பொலிஸார் குறித்த மூவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

# காட்டு யானை தாக்கியதில் ஏறாவூரில் குடும்பஸ்தர் சாவு



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி கருத்தப்பாலத்துக்கு அருகே காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செங்கலடி - கொடுவாமடு காளி கோயில் வீதியைச் சேர்ந்த 63 வயதானகுஞ்சித்தம்பி காளிக்குட்டி என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று மாலை செங்கலடி கறுத்தப் பாலத்துக் கருகே மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு காவலுக்குச் செல்லும்போதே அவரை காட்டு யானை தாக்கியது.

இதன்போது, சம்பவ இடத்தில் கூடிய பொதுமக்கள் தொடர்ச்சியாக இப்பிரதேசத்தில் இடம்பெறும் காட்டு யானை அட்டகாசத்துக்கு எதிராகத் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

நீண்டகாலமாக தாங்கள் இந்தப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற போதிலும் இராஜாங்க அமைச்சரோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை எனவும், நாட்டின் ஜனாதிபதிக்கு இங்கு என்ன நடக்கின்றது என்பது தெரியாத நிலையே உள்ளது எனவும், இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் பொய்யான தகவல்களையே தெரிவிக்கின்றனர் எனவும் மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.


குறித்த இடத்துக்கு வருகை தந்த திடீர் மரண விசாரணை அதிகாரி சடலத்தைப் பார்வையிட்டமையுடன், விசாரணைகளையும் முன்னெடுத்தார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு







# உலகக்கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடர் சூப்பர்-12 சுற்றுப்போட்டிகள் ஆரம்பம்

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் தகுதிகாண் சுற்றுப் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் சூப்பர்- 12 சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

இந்தச் சுற்றின் குழு 1 க்கான முதல் போட்டியில் தென்னாபிரிக்க, ஆஸ்திரேலிய அணிகளும் இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகவுள்ள இரண்டாவது போட்டியில் தற்போதைய சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து அணிகளும் மோதுகின்றன.

சூப்பர் -12 சுற்றின் குழு1 இல் இலங்கை, பங்களாதேஷ், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளும், குழு 2 இல் இந்தியா, ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாந்து, நமீபியா, நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளும் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சுற்றில் இலங்கை பங்கேற்கும் முதலாவது போட்டி நாளைய தினம் பங்களாதேஷ் அணிக்கு எதிராக சார்ஜாவில் நடைபெறவுள்ளது. நாளைய இரண்டாவது போட்டியில் இந்திய - பாகிஸ்தான் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன




# சூப்பர்-12 சுற்றுக்கு தகுதிபெற்று வரலாறு படைத்தது நமீபியா

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் நேற்றைய தகுதிகாண் சுற்றுப்போட்டியில் நமீபியா அணி 8 விக்கெட்டுக்களால் அயர்லாந்து அணியை வீழ்த்தி சிறப்பானதொரு வெற்றியைப் பதிவு செய்ததோடு அடுத்த சுற்றுக்கும் தகுதி பெற்றது.

தனது ஆரம்பப் போட்டியில் இலங்கையிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்த நமீபியா அணி, இரண்டாவது போட்டியில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி சூப்பர்- 12 சுற்றுக்கான வாய்ப்பைப் பிரகாசப்படுத்தியது. இந்த நிலையில், அயர்லாந்து அணிக்கெதிராக நேற்று நடைபெற்ற தீர்மானமிக்க மூன்றாவது போட்டியில் 8 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டிய நமீபியா அணி, ரி-20 உலகக் கிண்ண வரலாற்றில் முதல் முறையாக இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

சார்ஜாவில் நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்து, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 125 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. போல் ஸ்டெர்லிங் 24 பந்துகளில் 38 ஓட்டங்களையும் கெவின் ஓ பிரையன் 25 ஓட்டங்களையும் எடுத்தனர். நமீபியா அணியின் ஜான் ப்ரைலின்க் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், டேவிட் வைஸ் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 126 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நமீபியா அணி, அணித் தலைவர் கெஹார்ட் எரஸ்மஸின் அரைச்சதத்தின் உதவியால் 18.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 8விக்கெட்டுக்களால் மிக இலகுவாக வெற்றியீட்டியது. கெஹார்ட் எராஸ்மஸ் 53 ஓட்டங்களையும், டேவிட் வைஸ் 28 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்று அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச்சென்றனர். வீழ்த்தப்பட்ட இரண்டு விக்கெட்டுக்களையும் அயர்லாந்தின் கம்ப்பர் கைப்பற்றியிருந்தார். இந்தப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக நமீபியாவின் டேவிட் வைஸ் தெரிவானார்.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் முதல் முறையாகப் பங்கேற்றுள்ள ஐ.சி.சி. யின் அங்கத்துவ நாடான நமீபியா அணி, தமது முதல் ரி-20 உலகக் கிண்ணத்திலேயே சூப்பர்-12 சுற்றுக்குத் தகுதிபெற்று வரலாறு படைத்தது. இலங்கை, பங்களாதேஷ் மற்றும் ஸ்கொட்லாந்து ஆகிய 3 அணிகளும் சூப்பர்-12 சுற்றுக்கு தகுதி பெற்றுவிட்ட நிலையில், நான்காவது அணியாக நமீபியா நுழைந்தது.

சூப்பர்-12 சுற்றில் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நியூசிலாந்து, ஸ்கொட்லாந்து ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ள முதலாவது குழுவில் விளையாட நமீபியா அணி வாய்ப்புப் பெற்றுள்ளது.

# நெதர்லாந்தை இலகுவாக தோற்கடித்தது இலங்கை

இலங்கை மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான ரி-20 உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுக்கான நேற்றைய போட்டியில் 8 விக்கெட்டுக்களால் இலங்கை அணி சாதனை வெற்றியைப் பெற்றுள்ளது.

தகுதிகாண் சுற்றில் குழு ஏ யில் இடம்பெற்றிருந்த இலங்கை கிரிக்கெட் அணி, தமது முதலிரண்டு போட்டிகளிலும் நமீபியா, அயர்லாந்து நாடுகளை வீழ்த்தி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்ற நிலையில் தமது இறுதிக் குழுநிலைப் போட்டியில் நெதர்லாந்து அணியை எதிர்கொண்டது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாடும் நிர்ப்பந்தத்தை நெதர்லாந்துக்கு வழங்கியது. இந்தப்போட்டிக்கான இலங்கை அணியில் தினேஷ் சந்திமாலுக்குப் பதிலாக சரித் அசலன்கவிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நெதர்லாந்து அணி, இலங்கை அணியின் சுழல்பந்துவீச்சிற்குத் தாக்குப் பிடிக்கமுடியாமல் விக்கெட்டுகளை சீரான இடைவெளியில் இழந்தது.

10 ஓவர்களில் வெறும் 44 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது நெதர்லாந்து. அந்த அணி பெற்ற 44 ஓட்டங்கள், ரி-20 உலகக் கிண்ணப் போட்டிகளில் அணியொன்று பெற்ற இரண்டாவது குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும்.

அந்த அணியின் கொலின் அகர்மன் 11 ஓட்டங்களைப் பெற்றார். நெதர்லாந்து சார்பில் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றவர் அவர்மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் லஹிரு குமார, வனிந்து ஹஸரங்க இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும் மகீஷ் தீக்ஷன 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.



45 ஓட்டங்களென்ற மிக இலகுவான வெற்றியிலக்கை அடைவதற்கு துடுப்பாடிய இலங்கை அணி, 7.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை பறிகொடுத்த நிலையிலேயே வெற்றிபெற முடிந்தது. குசல் ஜனித் பெரேரா ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களைப் பெற்றார்.

போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் லஹிரு குமார தெரிவானார்.

இந்தப்போட்டியின் வெற்றியோடு தகுதிகாண் சுற்றின் குழு ஏ யில் மூன்று வெற்றிகள் பெற்று 6 புள்ளிகளோடு இலங்கை அணி முதலிடம் பெற்றது.

# தனியார் நிறுவனமொன்றின் கணக்குக்கு பறிமாற்றப்பட்டுள்ள 125.7 கோடி டொலர்

நனோ உர கொள்வனவுக்காக இந்திய நிறுவனத்துக்கு முறைகேடாக கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

நாடாளுமன்றத்தில்நேற்று(வெள்ளிக்கிழமை) உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் ஹேரத் மேலும் தெரிவிக்கையில் –

கொழும்பு நகர மண்டப மக்கள் வங்கியின் கிளையில் பராமரிக்கப்பட்டு வரும், வரையறுக்கப்பட்ட ஐக்கிய விவசாயிகள் நம்பிக்கை நிதியம் என்ற தனியார் நிறுவனத்தின் கணக்குக்கு 125.7 கோடி டொலர்கள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய விவசாயிகள் நம்பிக்கை நிதியம் என்ற அமைப்பு 2021 ஒக்ரோபர் 18ஆம் திகதியன்றே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதே தினத்தில் பணமும் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் அல்லது அமைச்சரவையின் ஒப்புதல் இல்லாமல் இந்த பணத்தை பரிமாற்றம் செய்யும் உத்தரவு, ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தரவால் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எந்த அடிப்படையில் 29 கோடி ரூபா பணம் பரிமாற்றம் செய்யப்பட்டது என்று விஜித ஹேரத் கேள்வி எழுப்பியுள்ளார். இந்தக்கொடுப்பனவில் கப்பல் போக்குவரத்துக்கான 9.02 கோடி ரூபாவும் உள்ளடங்குவ தாக ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் விஜித ஹேரத்தின் கருத்துக்களுக்கு பதிலளித்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே –

குறித்த கொடுப்பனவு பரிமாற்றத்தில் முறைகேடுகள் இல்லை.வரையறுக்கப்பட்ட இந்திய விவசாய உரக்கூட்டுறவு நிறுவனத்தின் உள்ளூர் முகவருக்கே அந்த பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் இந்திய உயர்ஸ்தானிகரகம் ஊடாக நனோ உரத்தை கொள்வனவு செய்வதற்கான முன்வைக்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# திடீரென நிலத்தில் வீழ்ந்து யாழில் ஒருவர் பரிதாப சாவு

யாழ். பண்டத்தரிப்பு பிரான்பற்று பகுதியில் திடீரென நிலத்தில் விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காணி ஒன்றில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த போது மேற்படி நபர் திடீரென விழுந்து உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டை இரண்டாம் ஒழுங்கையைச் சேர்ந்த 64 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சங்கானை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு அங்கு திடீர் மரண விசாரணை அதிகாரியின் விசாரணையின் பின் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

# முதிர்ந்த 37 சந்தன மரங்கள் இலங்கையில் உள்ளனவாம்!

## அமைச்சர் தகவல்



இலங்கையின் முதிர்ச்சியடைந்த 37 சந்தன மரங்கள் மாத்திரமே உள்ளன என சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் செயலணியுடன் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின் போது இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

சந்தன மரத்தை இலங்கையில் இலகுவாக நாட்ட முடியும். எனினும் நாட்டுவதற்கான சந்தன மரங்களை தேடிக் கொள்வதில் சிரமம் உள்ளமையால் அது இலங்கையில் அரிதாகியுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தற்போது சிவப்பு மற்றும் வெள்ளை சந்தன மரங்கள் இல்லை. பெரும்பாலான சிவப்பு மற்றும் வெள்ளை சந்தன மரங்கள் இந்தியாவில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. முதிர்ச்சிடைந்த சந்தன மரம் ஒன்றின் விலை 2 கோடி ரூபாவாகும். சந்தன மரம் ஒன்று வரண்ட வலயப்பகுதியில் 8-12 அடி உயரத்துக்கு வளரும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கலந்துரையாடலில் பங்கேற்ற ஆயுர்வேத வைத்தியர்கள், ஏற்கனவே நாடாளாவிய ரீதியில் 4,800 சந்தன மரக்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# இத்தாலிக்கான புதிய தூதராக ஜெகத் வெள்ளவத்த நியமனம்

ஆஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகராக ஜெகத் வெள்ளவத்த நியமிக்கப்பட்டமைக்கு கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட நிலையில் இத்தாலிக்கான தூதுவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

உயர் பதவிகளுக்கான நாடாளுமன்ற குழு இந்த நியமனத்தை நேற்று (வெள்ளிக்கிழமை) ஏற்றுக்கொண்டது.

ஏற்கனவே அவர் ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டு நாடாளுமன்றக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தார்.

இதேவேளை நைஜீரியாவுக்கான தூதுவரான ஜனக பிரியந்த பண்டார, மியன்மாருக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் ஜேஜே ரட்னசிறி, ஜே.எம் உதித் ஜெயசிங்க ஆகியோர் முறையே பொது



நிர்வாகம்,விவசாய அமைச்சுக்கான செயலாளர்களாகவும், எஸ்.எம்.பியதிஸ்ஸ ஆபரணத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொமர்ஷல் வங்கியால் உபகரணங்கள்







கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநர் லயன் எஸ்.ரங்கநாதனின் முயற்சியால் 30 லட்சம் ரூபா பெறுமதியான ஓட்டோ கெரடோ ரிஃப்ராக்ட் மீற்றர், மல்ரிபாராமொனிட்டர் என்பனநேற்று(வெள்ளிக்கிழமை) தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொமர்ஷல் வங்கி ஊடாக வழங்கப்பட்டன.

இந்த கையளிக்கும் நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தவிசாளர் முன்னாள் பிரதம நீதியரசர் ஸ்ரீபவன், கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநர் லயன் எஸ்.ரெங் கநாதன், சுன்னாகம் கொமர்ஷல் வங்கியின் முகாமையாளரும், மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத் தலைவ ருமாகிய லயன் ஆர்.கஜரூபன் ஆகியோர் இணைந்து வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திலீ பனிடம் கையளித்தனர்.

இந்தக் கையளிக்கும் நிகழ்வில் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும், லயன்ஸ் கழக ஆளுநர் சபையின் பிரதான மாவட்ட இணைப்பாளரும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்க செயலாளருமான லயன் சி.ஹரிகரன், வைத்திய நிபுனர் ஸ்ரீ.கல்பனா, ஆளுநர் சபை பிரதி செயலாளர் லயன் ம.மயூரதன், ஆளுநர் சபை மாவட்ட பிரதான இணைப்பாளர்களான லயன் கிங்ஸ்ரன் ரமேஸ், லயன் பு.தினேஸ்குமார், சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செல்வராகினி, சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான லயன் தினேஸ்குமார், லயன் நா.விஜிதா, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க உப செயலாளர் சோ.செல்வரட்ணம், கண் தொழினுட்பவியலாளர் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த சாதனம் கண்ணின் ஒளிவிலகல் பிழைகளை அளவிடப் பயன்படுகிறது. கண் சிகிச்சை தொடர்பில் புதிதாக ஏற்பட்ட தாக்கங்கள் மற்றும் கண் தொழிநுட்பவியலாளரின் உதவியுடன் ஏனைய வைத்தியர்கள் உதவியின்றி இனங்காணும் திறன் கொண்டது.

இந்த இயந்திரம் ஊடாக தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒரு மாதத்தில் சுமார் 200 நோயாளிகள் பயனடைவார்கள்.

அடுத்து மல்ரிபரா மொனிற்றர். இந்த இயந்திரம் இரத்தம் போன்ற நோயாளிகளின் முக்கிய அறிகுறிகளை கண்காணிக்க உதவும், ஒட்சிசன் செறிவு நிலை மற்றும் ஈசிஜி. அதிகரித்து வரும் கொவிட் 19 உடன் இந்த கருவி நோயாளிகளுக்கு மிகவும் பயனுள்ள ஒன்றாகும்.

இதேவேளை, நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை என ஒரு கோடி ரூபா பெறுமதியிலான மருத்துவ உபகரணங்கள் கொமர்ஷல் வங்கியால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.